## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.70** **நாள் : 05.04.2025**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொத்துவரியானது, பிரதான வருவாய் ஆகும். இதன் மூலமே, சென்னை மாநகருக்கு தேவையான அடிப்படை கட்டமைப்புகள், குப்பை திடக்கழிவுகள் அகற்றுதல், தெரு விளக்குகள், பூங்காக்கள் மற்றும் சாலைகள் பராமரித்தல், பொது சுகாதாரம் நோய்த்தடுப்புப் பணி போன்ற அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 84 (1 )-ன்படி, ஒவ்வொரு அரையாண்டு தொடக்கத்தின் முதல் 30 தினங்களுக்குள் சொத்துவரியினை செலுத்தும் சொத்து உரிமையாளர்களுக்கு, நிகர சொத்துவரியில் 5 சதவீதம் அல்லது அதிக பட்சம் ரூ.5000/- ஊக்கத் தொகை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது 2025-26ஆம் நிதி ஆண்டின் முதல் அரையாண்டு (1/2025-26) தொடங்கியுள்ளதால், சொத்து உரிமையாளர்கள் தங்களது அரையாண்டு சொத்துவரியினை ஏப்ரல் 30ம் தேதிக்குள் செலுத்தி ஊக்கத் தொகை பயனைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**